செ.வெ.எண்.04 நாள்.02.01.2017

# பத்திரிகை செய்தி

அரசாணை எண்.நிலை.86,சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை, நாள்.25.11.16-ன்படி தமிழ்நாடு அரசு,சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் கடலூர்,அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் தங்கியிருக்கும் இளஞ்சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் மதிப்பூதிய அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலைப்பட்டம் பெற்ற நபர்கள், அவர்களது விண்ணப்பங்களை உரிய சான்றின் ஒளிநகலுடன் மற்றும் கைப்பேசி எண்ணுடன் 6.1.2017-க்குள் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு வந்து சேரும்வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் வல்லுநர்கள் கொண்ட தேர்வு குழு மூலம் நேர்முக தேர்வு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

தெரிவு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் (ஒரு வருடத்தில் 60 நாட்களுக்கு மிகாமல்/வாரம் ஒரு முறை) மதிப்பூதிய அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000/-( ரூபாய் ஓராயிரம் மட்டும்) வழங்கப்படும்.மேலும் விவரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட மாவட்ட நன்னடத்தை அலுவலர்களை தொடர்பு கொண்டு தெளிவுபெறலாம்.

29.12.2016
மா.ஆ.த.

விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
நன்னடத்தை அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
எண்.312,317,இரண்டாவது தளம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர்-607 001.